# நிகழ்கால நிஜங்கள்

## கவிதைத் தொகுப்பு



நிரோசினி குபேந்திரன்

வெளியீடு

**துளிர்கள்**

**உள சமூக மேம்பாட்டு நிறுவனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்கால நிஜங்கள்

(கவிதைத் தொகுப்பு)



நிரோசினி குபேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | நிகழ்கால நிஜங்கள். |
| நூலாசிரியர் | :- | நிரோசினி குபேந்திரன். |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு. |
| பதிப்பு | :- | முதல் பதிப்பு 2013. |
| வெளியீடு | :- | துளிர்கள் உள சமூக மேம்பாட்டு நிறுவனம். |
| பக்கங்கள் | :- | 50 + iv |
| அச்சுப்பதிப்பு | :- | எஸ். எஸ். ஆர். பிறிண்டேர்ஸ்,<br>383/16, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| விலை | :- | 120/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

"என் ஆருயிர் தந்தை
**இரத்தினம் - குபேந்திரன்** அவர்களுக்கு
கலையவில்லை உன் நினைவுகள்
கரையவில்லை எம் பாசங்கள்
தொலைதூரம் சென்றாலும்
தொடர நினைக்குது என் நெஞ்சம்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் - நீயே
என் தந்தையாகும் வரம் கேட்கிறேன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மனதின் எண்ணக்குவியல்கள் சமுதாய அனுபவப் படிமானங்களுடே எண்ணற்ற வடிவங்களில் வெளிப்பட்டுக் கொள்கின்றன. ஒவ்வொரு ஜீவனினுள்ளும் மனப்பாங்கு எனும் மகரந்தங்கள் மாறுபட்ட வடிவங்களில் மணம்வீசிக்கொண்டிருக்கும். காலமும், பட்டகாயங்களும், புதிய சிந்தனைக் கோலங்களை மூளையினுள்ளே முளைவிடவைக்கும். அந்தமுளைகள் முறுக்கேறி முன்னே வரும்போது, சமுதாயத்தின் விம்பங்கள் சாமர்த்தியமாய் பதிந்துவிடுகின்றன.

கவிதைகள் காலத்தின் பதிவுகள். அவை அவ்வச் சூழல்களின் இயல்புகளை இயம்பத் தவறுவதில்லை. மனதினுள்ளே நடக்கும் எண்ணப் போராட்டத்தினூடே கவிதைகள் கலை நகைகளை அணிந்து கோலோச்சும் போது கருத்துக்களும் களைகட்டி நிற்கும்.

கவிதைகள் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் ஒருங்கே கொண்ட களஞ்சியங்கள் கவிதைகளே தொன்று தொட்டு மக்களோடு ஒட்டியிருக்கும் கலை வடிவங்களென்றால் மிகையில்லை.

கு. நிரோசினியின் "நிகழ்கால நிஜங்கள்" கூட நிஜங்களை நினைவுகளாக கொட்டத்துடிக்கும் ஒரு முயற்சிதான். இக்கவிதைத் தொகுப்பினூடாக சமூகத்தின் சரித்திரத்தை தன் எண்ணக்கோப்பைக்குள் இட்டு அதன் பல்பரிமாண வடிவங்களாக தந்து நிற்கிறார்.

சமுதாயத்தை நேர்வழியில் செலுத்த வேண்டும் என்கின்ற அவாவும் புதிய மாற்றங்களை வேண்டும் தேடலும் பாராட்டத்தக்க விடயங்களே!

நிரோசினி தொடர்ந்தும் தனது கவிதையின் நயங்களைக் குழைத்து நளினமாக எழுதும்போது மேலும் சிறந்த கவிதைகளை சிருஷ்டிக்க முடியும் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. எனவே இவரது கவிதைகளை வாழ்த்தி வரவேற்போம்!

"மௌனத்தின் முடிவில்
துளிர்க்கும் என்கவிதை
கலைச்கோர் அர்ச்சனை"

என விழிக்கும் நிரோசினியின் அர்ச்சனையை ஏற்போம். ஏற்றம் பல பெற வாழ்த்திடுவோம்

**கவிஞர் சூரியநிலா.**
**ஆ. ஜென்சன் றொனால்ட் (BA)**
**உசன், மிருசுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"மனிதம் மரணித்து விட்டதா..?
ஆம் என்றால் ...?
மனிதன் வாழ்வதில் அர்த்தம் இல்லை"

இந்த நிமிடம் வரை ஏதோ ஒரு பற்றுக்கோட்டை பிடித்துக் கொண்டு... ஏதோ ஒரு எதிர்பார்போடு ஒவ்வொரு மனங்களும் நிஜவாழ்வில் தடுமாறி, தடம் புரண்டு ஒவ்வொரு நாட்களையும் விழுங்குகின்றன.

இதுதான் உண்மை. நிச்சயமாக பல விஷயங்களை சில மனங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஏற்றுக்கொள்ள தயங்குகின்றன. அந்த வகையிலே ஒவ்வொரு மனித மனங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக இந்த நிகழ்கால நிஜங்கள் எனும் கவிதைத்தொகுப்பை முழு வீச்சில் ஆக்கிரமித்து நிற்கும் செல்வி நிரோசினி – குபேந்திரனைப் பற்றி நான் சொல்ல நினைத்தால்...?

உண்மையாகவே நான் பெருமைப்படுகின்றேன். எமது துளிர்கள் நிறுவனத்தின் 10வது பிரிவு உள ஆற்றுப்படுத்தல் கற்கைநெறி மாணவி நிரோசினியின் சமூக நோக்கு: எதிர்பார்ப்பு, ஏக்கம், வேதனை, மனித மனத்தின் உண்மையான உணர்வுகள் - இப்படியான கண்ணோட்டத்தில் கவிதைவடிவில் வெளிப்படுவதை இட்டு பெரு மகிழ்வடைகின்றேன். ஒவ்வொரு கவிதையின் உயிரோட்டமும் உணர்வுகளாய் மாறி சில கவிதைகள் என் கண்களையே கலங்க வைத்து விட்டன என்பதை உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றேன்.

என் மாணவியின் உணர்வு பூர்வமான கவிதைகளை மனதார வரவேற்று வாழ்த்தி பாராட்டுகின்றேன்.

நிரோசினியின் நியாயமான எதிர்பார்ப்புகள்,
கனவுகளை உளமார வாழ்த்துகின்றேன்.

கே.எஸ்.ரகு
(குடும்ப உளவள துணையாளர்)
பணிப்பாளர்.
துளிர்கள் நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை....!

இன்றைய சமுதாயத்தில் எத்தனையோ விம்பங்களைப் பார்த்துவிட்டேன் அத்தனையும் எத்தனைவிதம். ஒவ்வொரு மனிதனையும் நோக்கும் போது அவனுக்குள்ளும் அற்புதமான மனம் இருக்கின்றது என நாம் சிந்திக்க வேண்டும். அந்த மனத்துள் எத்தனையோ உணர்வுகள் மறக்க முடியாத நினைவுகள், தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை வெளிப் படுத்த முடியாத நிலையில் மனித மனம் மரத்துப்போகின்றது. அத்தகைய மனத்தின் உணர்வுகளை கருவில் இருக்கும் குழந்தை தொடக்கம் வயது முதிர்ந்த முதியோர் வரை அவர்களின் நிலைக்கேற்றவாறு வெளிப்படுத்தும் முகமாக இவ் நிகழ்கால நிஜங்கள் என்னும் கவிதைத்தொகுப்பை ஆக்கியுள்ளேன்.

இவ் நிகழ்கால நிஜங்கள் என்னும் கவிதை தொகுப்பை ஆக்குவதற்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்த எனது குடும்பத்தினர்க்கும், உறவுகளிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு பல கவிதைப் போட்டிகளை நடாத்தி கவிதைத் திறனை வெளிப்படுத்த களமமைத்து தந்த எனது பாடசாலையான யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

மற்றும் எனது கவிதையினை வெளியீடு செய்வதற்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்த துளிர்கள் நிறுவன சமூகத்தினர்க்கும் வாழ்த்துரை வழங்கிய பணிப்பாளர் அவர்களுக்கும், துளிர்கள் உள ஆற்றுப்படுத்தல், பிரிவு – 10 மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எனது கவிதைத்தொகுப்பை சரிபார்த்து அணிந்துரை வழங்கிய கவிஞர் சூரியநிலா அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு வகைகளிலும் எனக்கு உதவி புரிந்த எனது ஆருயிர் நண்பி.க.கனகதுர்க்கா அவர்களிற்கும் எனது யாழ் பல்கலைக்கழக அன்பு நண்பிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இக் கவிதைத் தொகுப்பை நூலுருவாக வடிவமைக்க பல வழிகளிலும் உதவி புரிந்த வை.திலீபன் அவர்களுக்கும் பதிப்பித்த SSR அச்சகத்தினர்க்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

அன்புடன்.

நிரோசினி குபேந்திரன்

யாழ் பால்கலைக்கழக கலைப்பீட 2ம் வருட மாணவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பேனாமுனையில் நான்..........!

என் பேனாமுனை
சுரந்து செல்வது
மைக் குழம்பினை அல்ல
ஒவ்வொரு மனிதனின்
உணர்விலும் உள்ள
காலத்தின் சுவடுகளை
மனிதனின் உணர்வுகள்
ஊமையாய்
உறங்கும் போது
என் பேனா ......!
விழிக்க ஆரம்பிக்கின்றது!

மௌனத்தின் முடிவில்
துளிர்க்கும் என்கவிதை
கலைக்கோர் அர்ச்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றே விழித்தெழு

விழித்திடு மனிதா....!
மனிதநேயம் இன்னும்
மரணிக்கவில்லை !

கடந்த கால வலிகள்
காயங்கள் சோகங்கள்
இன்னும் ஆறவில்லை
என்றெண்ணி

உன்னை நீயே
ஏமாற்றாதே....!

உனக்காக ஓர் இனிமையான
நிகழ்காலமும்
ஒளிமயமான எதிர்காலமும்
காத்திருக்கின்றன

புண்ணான வேதனைகளை
உன் வாழ்விற்காய் உரமாக்கிவிட்டு
பொன்னான எதிர்காலத்திற்காய்
இன்றே விழித்தெழு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியின் வித்து

மனிதா !
உன் ஒவ்வொரு துளிக் கண்ணீரும்
வலிமை வாய்ந்தது
காயப்பட்டு வெந்து போன
மனதின் ஒத்தடமாகும் மருந்து கண்ணீர்
அத்தகைய கண்ணீரை
வியர்வைத்துளியாக்கு
அதுவே உன் வெற்றிக்கு வித்தாகும்

## வாழ்க்கை

காலம் தயாரித்து விட்ட
நாடக மேடையில்
நித்தமும் நடித்து
ஆயுளின் அந்தத்தில்
அடங்கிப்போகும்
அழியாத சுவடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம் நிலைத்திட வேண்டும்

சமாதானம் நிலைத்திட வேண்டும்
இங்கு சாந்தியும்
கிடைக்க வேண்டும்
மலரும் மொட்டுக்கள்
அரும்பிலே சிதைந்து
உருக்கெட்ட நிலை எமக்கு
என்றுமே வேண்டாம்

போர் முனையில் ஆயுதம் பிடிக்க
எம் கைகளிற்கு கற்றுக் கொடுக்காதீர்
கைவிரல் இடுக்கில் பேனா பிடிக்க
கற்றுக் கொடுங்கள்!

விடியல்கள் மலர்ந்திடாத
இருள் சூழ்ந்த இரவுகளில்
எறிகனைக்கான அழைப்பிதழ்களை
எந்நேரமும் எதிர்பார்த்து
குண்டு வீச்சிற்கு விருந்தாகும்
நாட்களும் எமக்கு வேண்டாம்
காயப்பட்டு வெந்து போன
புண்ணான உடலும்
நொந்து போன உள்ளமும்
சீர்பெற எத்தனை
நாட்களாகுமோ.....?
நாமறியோம் ஆகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும்.......!

வேண்டாம் எமக்கு இந்நிலை!
சமாதானப் புறாவை
வானில் பார்க்க எண்ணி
எத்தனையோ இயந்திரப் பறவைகளைப்
பார்த்து விட்டோம்

சுதந்திரக்காற்றை சுவாசிக்க எண்ணி
குண்டு வீச்சின் கந்தக வாயுவை
சுவாசித்து விட்டோம்

இனியும்........!

வேண்டாம் இந்நிலை
இன மத பேதமின்றி நாம் வாழ
சமாதானம் நிலைத்திட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் வருவது எப்போது........?

இருட்டுக் கருவறையில்
இமைமூடிக் கிடந்து
குருட்டுப் பாடங்கள்
கற்றுக் கொண்டிருக்கின்றேன்
நான்....!

வெளியே போடும்
சண்டைகள் எனக்கு
தெளிவாய் கேட்கின்றன

ஐயோ மாமி....!
என் குடுமியை விடுங்கோ
என் உணர்வுகள் அசைகின்றன
கூறியவள் என் முகமறியா தாயன்றோ

தடியா சீதனம்
கொண்டு வராத இவளுக்கு
சோறு போட உனக்கு
வெட்கமில்லையோ....?
சீறுகின்றாள் என்
வருங்கால பாட்டி
போடி போய்
சீதனத்தை வாங்கி வா
உறுமுகின்றான்
என் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்காதைங்கோ
என்னை அடிக்காதைங்கோ
ஐயோ....என் பிள்ளை!

சில அடிகள் என்னருகே
விழுந்தது போல் உணர்கின்றேன்
நானும் நெளிந்து கொள்கின்றேன்
நிசப்தம்......!
கொடுமைக்காரர்கள் போய் விட்டார்களோ
எனக்கு தெரியாது
ஆனால்.......?
ஒரு குரல் விம்முகின்றதா ....?
பார்ப்பதற்கு வழியில்லை
ஆனாலும் புரிகின்றது
மௌனமாய் அழுகின்றாள்
என் தாய்
தன் வயிற்றை
ஒரு முறை தடவிப் பார்க்கின்றாள்
என்கண்னே உனக்கு வலிக்கின்றதா....?
அந்த ஸ்பரிசத்தில் நான்
என்னை மறக்கின்றேன்

ஆனால்......?

விம்முகின்ற உன் நெஞ்சத்திற்கு
ஆறுதல் சொல்லவும்
உன் கண்ணீரைத் துடைக்கவும்
நான் வருவது எப்போது......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமர ஊஞ்சல்

மீண்டும் புதுஊஞ்சல் கட்டிவிட்டேன்
அதே மாமரத்தில்துள்ளிப்பாய்ந்து
விளையாடி விழுந்து எழுந்தமாமரத்தில்
மீண்டும் ஓர் ஊஞ்சல்
கட்டி விட்டேன்

நீ வரும் திசை நோக்கி
என் இரு விழிகளும் தவமிருக்க
உன் வரவை எதிர்பார்த்து
ஊஞ்சலருகே நான்
இன்று தனிமரமாய்

நண்பா .....!

என்னோடு ஊஞ்சலாட
ஒரு முறையாவது வந்து விடு
ஆனால்.....?
நீ வரமாட்டாய்
கல்லறைக்குள் ஆழ்ந்த தூக்கத்தில்
தனித்திருப்பாயோ?

ஓ..........!
மறந்து விட்டேன் –உனக்காக
கல்லறை கூட இல்லை
குண்டு துளைத்த விநாடி உயிர் பிரிந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்த இடத்தில்
ஆயிரமாயிரம் மக்களோடு
உன்னைப் புதைத்த போது
நீ எப்படி தனித்திருக்க முடியும்

ஆனாலும்......?

நான் இன்று தனிமரம் தான்
உன்னைப் போல் நண்பன்
இன்னும் கிடைக்கவில்லை
நாம் விளையாடிய மாமரத்தில் ஊஞ்சலாட
இன்னும் ஆசை வரவுமில்லை
என்னைப் போல்
என் ஊஞ்சலும் தனித்து தொங்குகின்றது
அதே மாமரத்தில்!

## வரதட்சணை

சிறப்பான வாழ்வின்
சீர்வரிசை என
தலைக்கனம் கொள்ளும்
வரதட்சணையே......!
முதிர் கன்னிகளின்
முடிச்சு போடாத வாழ்வின்
சீர்குலைவிற்கும் காரணம்
நீதான் என்பதை
உணர்வது எப்போது.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைத் தேடி வருவேன்

அன்று நீ கூறிய
சத்திய வாக்கு இன்றும்
என் நெஞ்சை
நிறைத்து நிறைக்கின்றது
என் தாய் கூறும் போது
நான் நம்பவில்லை
என் மனிதாபிமானம்
சாகடிக்கப்படுகின்றது என நினைத்தேன்

என்னைக் கண்டதும்
ஏன் நீ ஒளிந்து போகின்றாய்
வீட்டுக்குள் இருந்தவாறே
இல்லை என தூதனுப்புகின்றாய்
என்றாலும் அடிக்கடி உன் வீடு நோக்கி வர
கால்கள் துடிக்கின்றன

ஆனால்.....!

உன் தரிசனம்தான் எனக்கு கிடைக்கவில்லை
ஆனாலும் மீண்டும் உன்னைத்தேடி
வருவேன் நண்பா....!
நான் உனக்கு கொடுத்த கடனை
வாங்கும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனை அறியாயோ.....?

கனவாகிப் போனது நீ மட்டுமல்ல
என் நினைவுகளும் தான்
பூவிதழ் கண்ணை திறந்து நான் பார்த்தது
உலகை அல்ல உன்னைத்தான்

துள்ளித்திரிந்த பள்ளிப் பருவத்தில்
இனிதாய் கழிந்த என் பொழுதில்
இடியாய் விழுந்தது உன் பிரிவு
இனிமேல் எனக்கேது நல்வாழ்வு

கள்ளமில்லா பாசம் உன்மீது கண்டேன்
களங்கமில்லா இதயம் கொண்டேன்
அலைகடல் போல் ஆர்ப்பரிக்கும் என்மனது
சலனமற்றுக் கிடக்கின்றது உன் பிரிவால்

அப்பா என்ற உறவிற்கு விலையேது
அன்பால் ஆள உலகில் இடமேது
கனியாய் இருக்கும் உறவு அதை
பிஞ்சிலே வீழ்த்தியது யாரு...?

சுற்றிச் சுழலும் பூமியே –நீ
எந்தன் சோகம் அறியாயோ ...?
மனதை வருடும் இளங்காற்றே
என் இனிய உயிர் பிரிந்ததை அறியாயோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனே நீ உதிக்க மறக்க மாட்டாய்
நானும்
என் தந்தையை நினைக்க மறக்க
மாட்டேன்
காற்றே உன் இயக்கத்தை நிறுத்தாதே
என் தந்தை மூச்சு உன்னிடமே

இறைவா ஏன் உயிர்களைப்
படைக்கின்றாய்...?
துன்பத்தை தருகின்றாய்
ஒருமுறை பூமியில் நீ பிறந்து விடு
நான் படும் வேதனை நீ அறிவாய்

## கல்லறைப் பூக்கள்

பெண்னே நீ விதைத்த
அன்பை நீயே
பறித்துக் கொண்டதால்
நான் தொலைந்தேன்
கல்லறைக்குள்
அதில் உன் காணிக்கையாக
கல்லறைப் பூக்களையாவது
தூவிவிட்டுச் செல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்களை நாட்டுவோம்

மண்ணை உயிரூட்டி
மனதிற்கு இதமளித்து
பூமிக்கு அழகு செய்து
பூக்களைப் பூத்து நிற்கும்
புதுமையான மரங்கள

வீடு கட்டிடவும் தளபாடம் செய்திடவும்
இதமான சுவாசத்திற்கும்
தன்னைத் தரும் மரங்கள்

மரமே......!

நீ வளர்ந்தால் இலை தருவாய்
தாவர உண்ணிக்கு உன்னை
உணவாய் படைப்பாய்
பூத்தால் மலர்தருவாய்
காய்த்தால் காய் தருவாய்

மரங்களே ....!

உங்கள் பயன்களை வாழ்த்திட
வார்த்தைகள் இல்லை
மானிடனோ உன்னை அழிக்கின்றான்
உன்னை அழிக்கும் மானுடனுக்கும்
உணவு படைக்க எண்ணி
விறகாய் எரிகின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகின்றேன் மரங்களை
மரங்களின் புனர் வாழ்விற்காய்
நாட்டுவோம் நல்ல மரங்களை

## இதயம்

என் உடலுக்குள் நீ
மறைந்திருந்தாலும்
உன் இருப்பை
அடிக்கடி சொல்கிறாய்
என்னுள் துடித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்த தானம்

என்னுள் சுற்றிச் சுழன்றோடும் –செந்நீர்
இதயத்தை வருடும் போது
சொல்லி விட்டுச் சென்றது
பல கதைகளை

விபத்தில் அடிபட்டு குருதியிழந்த
மனிதர்களைப் பார்க்கும் போதும்
போரினால் குருதியிழந்த மானிடர்களைப்
பார்க்கும் போதும் – இன்னும்
எத்தனையோ குருதித் தாகத்திற்கு
பலியான ஆயிரமாயிரம் நெஞ்சங்களின்
உள்ளத் துடிப்பைக் காணும் போதும்
உன்னில் இருக்கும் எனது
சிறு பகுதியையாவது
ஈய்ந்து விட மாட்டாயா?
எனக் கேட்டது

மானிட சமத்துவத்தை உணர்த்தி நிற்கும் –குருதியே
உன் உள்ளத்துடிப்பு புரிகின்றது
என் அணுக்கள் துடிக்கின்றன
என்னில் இருக்கும் உனது சிறுபகுதியை வழங்க
என் நெஞ்சம் நினைக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய ஊசியால் பையில் நிரம்பி
என்னை விட்டுப் போகும்
உன் சிறு பகுதியை
பெருமையாய் பார்க்கின்றேன் – நீயோ
இன்னொரு உடலுக்குள் செல்லும் பூரிப்பில்
உன்னை மறந்து இருக்கின்றாய்

என் உணர்வுகள் துடிக்கின்றன
உன்னைத் தானம் செய்வதில் இருக்கும்
சுகம்
வேறெங்கும் இல்லை
இரத்த தானமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றம் ஏன்......?

சிகை அலங்கார நிலையங்களில்
முடியை சிதைத்து விட்டு
துள்ளி நடை போடும்
இள நங்கையரும்

சிகையை நீள வளர்த்துவிட்டு
ஒற்றை ஜடை போடும் ஆடவரும்
சீரழிந்து செல்லக் காரணமென்ன
புரியவில்லை ......?

சினிமா மோகம் பற்றிக்கொள்ள
வாழ்க்கை முழுவதும்
வீணாய் கழிகின்றதே

திரையில் மங்கை அழுகின்றாள்
வீட்டில் நங்கையும் அழுகின்றாள்

கந்தபுராணக் கலாச்சாரமாம்
எம் யாழ்ப்பாணக் கலாச்சாரம் –இன்று
கந்தலாகிச் சென்றதன்
காரணந்தான் எப்படியோ.......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் எனக்குண்டு

தாயின் முகமறியோம்
தந்தையின் குரல் அறியோம்
அன்பு என்ற வார்த்தைக்கு
அர்த்தம் என்னவென்றறியோம்

யார் வைத்த பெயரோ தெரியவில்லை
எமக்கு அநாதை என்று ஆண்டவன்
வைத்தான் இவ்வுலகில் வாழ

வானமே கூரையாக பூமியே
தரையாகக் கொண்டு
வாழ்ந்த என்னை வழிகாட்டியது
யாரோ தெரியவில்லை
அநாதை என்ற இல்லத்திற்கு

இனி நான் அநாதை இல்லை
என்னைப் போன்ற உறவுகள்
இங்குண்டு சேர்ந்து வாழ!

கு.நிரோசினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணத்தில் கூட சுகம் காண்பேன்!

தாலாட்டு நான் பாட
அதைக் கேட்டு நீ தூங்க
பூவிதழ் கண்ணின் அழகை
இமைக்காது நான் பார்த்து
என்னை மறந்தேனடா
உன் வெள்ளைச் சிரிப்பில்
கொள்ளை போய் இந்த உலகை மறந்தேனடா

பள்ளி உடையில் நீ
துள்ளிச் செல்கையிலே
வண்ணக்கனவுகள் நிறைத்து
வழியனுப்பும் என் நெஞ்சம்
பாடங்கள் பல பயின்று நீ
என் முன்னால் கூறுகையில்
என் உள்ளம் கொள்ளை போனதடா

துள்ளித்திரிந்து நீ வெற்றி வீரனாய்
வெற்றிக் கிண்ணத்தை முத்தமிட்ட போது
என் உள்ளமும் உன்னை அணைத்துக்
கொண்டதடா!

அறியாத பருவத்தில் உன் தந்தை
எம்மை விட்டுப் பிரிந்தபோது
எனதுயிர் உனக்காக தரித்து நின்றதடா
என் மகனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரி எனும் பட்டத்தோடு
நான் உனக்காய் பாடு பட்டேன் ஏனென்று
அறிவாயா ...?
பல்கலைக்கழகம் சென்று நீ
பட்டம் பெறவே தான் மகனே !

என் கனவு பொய்க்கவில்லை
கண்னே நிறைவேற்றினாய்
பட்டமும் பதவியும் வந்தபோது
அதிகாரமும் வந்து சேர்ந்ததடா

விரும்பிய மணவாழ்வை விரும்பி நீ ஏற்றபோது
மறுக்கவில்லையடா என் இதயம்
உன்வாழ்வு நல்வாழ்வு பெற
ஆசிகள் கூறியதடா என் உள்ளம்

மகனே......!
அன்று நீ கூறிய வார்த்தைகள்
இன்றும் என்னைச் சுடுகின்றதடா
பழையன கழிதல் வேண்டுமென என
என்னை வெறுத்தாயே

முதியோர் இல்லத்தில் எனைமுடக்கிவிட்டு
வேலைக்காரியென கூறிவிட்டு சென்றது
உன் வாய்தானா மகனே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிமூடி நான் தூங்கி நாளாச்சு
உன் நினைவால் நான் வாடிப்போயாச்சு –நீ
நோயால் துவளும் வேளை
ஆறுதலளித்த என் கண்கள்
உன் வரவிற்காய் தினமும் தவிக்குதடா –என் மகனே!
ஒரு முறை என்னைப் பார்க்க வந்துவிடு
உன் அன்பிற்காய் தினமும் தவிக்குதடா என் இதயம்

குழந்தைப் பருவத்தில் உதிர்த்த வெள்ளைச் சிரிப்பை
ஒரு தடவையேனும் உதிர்த்து விட்டுச் செல்
நான் மரணத்தில் கூட சுகம் காண்பேன் !

## உண்டு

குயிலே உனக்கு இசை உண்டு
மயிலே உனக்கு அழகுண்டு
சூரியனே உனக்கு ஒளி உண்டு
சந்திரனே உனக்கு குளிர்மை உண்டு
காற்றே உனக்கு தென்றலுண்டு
அதேபோல்
மனிதா உனக்கும் ஓர் தனித்தன்மை
உண்டு தட்டி எழுப்பிவிடு உன்
வாழ் நாளே வசந்தந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் திருந்துமா.....?

ஒரு தாய் வயிற்றுப்
பிள்ளைகள்
ஒன்றோடொன்று
சண்டை பிடிக்கின்றன -காணிக்காக

பணம் பணம் என்றெண்ணி
பகல் இரவு பாராது
பாடுபட்டுத்திரிகின்றனர்
பல நாட்களாக

சாதிச் சண்டைகள் ஒரு புறமும்
வேலிச் சண்டைகள்
மறுபுறமும்
கோழிச் சண்டை
போடுகின்றனர்

கேடு கெட்ட மனித ஜாதி
சீர்கெட்ட உலகிதென்று
நித்தம் கூறித் திரிகின்றனர்
தன்னைத் தான் திருத்தி விட்டால்
உலகம் தானாய் திருந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷச் செடி

அன்பிற்கு அடைக்கலம் தேடி
அன்பே உன்னைக் கரம் பிடித்தேன்
என் வாழ்வின் முத்தாய்
நீ தந்த பரிசு

அன்பான மழலைச் செல்வம்
வறுமையிலும் செம்மையாய்
வாழ வேண்டி
எத்தனையோ வேலைகளுக்கு அலைந்தேன்
நாளெல்லாம்

மெழுகாய் எனை உருக்கி
உன் வாழ்வில் ஒளியேற்ற
துடியாய் துடித்தேன்

கட்டார் சென்று கடுமையாக உழைத்து வந்து
கண்னே உன்னைக் காப்பாற்ற
எண்ணியிருந்தேன்
விடைபெறும் போது
உன் கண்ணீர் சிந்திய
அழகிய முகத்தின்
கவலைகளைப் போக்க
காலமெல்லாம் பாடுபட உறுதி கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்னே.....!

தொலை தூரத்தில் நான் இருந்தாலும்
என் உயிரை உன்னிடத்திலே
விட்டே வந்தேன்
அதை நீ உணர்வாயா.......?
கால் வயிறும் அரை வயிறுமாய்
என் பசி போக்கி
கடுமையாக உழைத்து காலம் தவறாமல்
அனுப்பினேன் உன்னிடத்தில்
நான் சம்பாதித்த பணங்களை

ஆனால்.......?

நான் பாடுபட்டவை சிதறிப்போனதென
உணர்ந்தது
இரு வருடங்களின் பின்பு

பெண்னே !
என்னை நீ புரியவில்லை –நீ
தேடியது சுகம் என்ற மூன்றெழுத்தைதான்
அதில் மனம் என்ற மூன்றெழுத்தை
தொலைத்து விட்டாய்
என்குழந்தையை எங்கோ விற்றுவிட்டு
நீயோ இன்னொருவனுடன் வாழ
தலைப்பட்டுவிட்டாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனை தொலைத்த பூ
பூஜைக்கு உதவாது என்றெண்ணி
உன்னைவெறுத்து ஒதுங்கிப் போகின்றேன்

ஆனால்.......?

என் குழந்தை இருக்குமிடத்தை கூறிவிடு
இல்லையேல் பைத்தியக்காரனாய்
ஆகிவிடுவேன்
ஏனெனில் நான் அன்பை உணர்ந்தவன்
உன்னைப் போல் அன்பை வெறுக்கும்
விஷச் செடி அல்ல என் இதயம்!

## கடிகாரம்

கடமையைச் சுட்டும்
கண்ணியமான
கடமையாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியல் எப்போது....?

கோடிக் கரையிலே
ஒதுக்குப் புறத்திலே
கலைந்து போன கேசத்தோடு
கழுவுகின்றாள் பாத்திரங்களை

அவள்....!

பன்னிரண்டு வயதையும்
தாண்டவில்லை
பள்ளி செல்லும் வயதினிலே
வீட்டில் வேலைக்காரி
ஆகிவிட்டாள்

பாடம் படிக்கத் துடிக்கும் மனதில்
பழுக்கக் காய்ச்சிய
சொல்லின் வேதனை
பேனா பிடிக்கும் பிஞ்சு விரல்களில்
நெருப்பின் திருவளையாடல்

அன்னை செத்து
ஒரு வருடம் ஆகவில்லை
சிற்றன்னை ஆட்சி அரங்கேறி விட்டது
இருண்டு போன அவளது வாழ்வில்
விடியல் வருவது எப்போது......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிந்து கொள்

உடலை வருத்தி
உழைக்கின்றாய்
உயிரைக் காப்பாற்ற
துடிக்கின்றாய்
சுகம் என்று விரும்பி
புகைக்கின்றாய்
அதுவே உன் உயிருக்கு
உலை என்பதை
நீயும் அறியாயோ ?
மனிதா சிந்தித்து செயற்படு
உன் நலமான வாழ்விற்காக !

## தனிமை

தொலைந்துபோன
கனவுகளை
மீட்டிப் பார்க்க
தனிமையே
உன்னைத்
தேடுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவள்

முற்றத்து கட்டிலில்
வானத்து முகம் பார்த்து
இமைக்காது கிடக்கின்றேன்
என் கடந்த கால வாழ்வை எண்ணி

குழந்தையாய் இளைஞனாய்
துள்ளிய என் காலங்கள்
கனவுகளைப் போல என் கண்ணில்
நிழலாடிக் கிடக்கின்றன

முதுமையின் சாயல்கள்
முகத்தில் முத்தமிட்டு
என்னை ஆட்கொண்டு விட்டன

வாழ்வு எனக்கு சொர்க்கமா...? நரகமா.... ?
புரியவில்லை
இளமையின் பூரிப்பில்
என்னை மறந்து
அவளின் அழகிய பாதங்களில்
தவமிருந்தேன்
வரம் தந்தாள் –எனக்கல்ல
என்னிடம் கொட்டிக் கிடக்கும்
ஏழுதலைமுறைக்கும் போதுமான
என் சொத்துக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவண்டுக் கண்களில்
கொள்ளை போய்
வில் போன்ற புருவங்களில்
என்னை வளைத்து
சிவந்த இதழ்களில் மறந்து
கருங்கூந்தல் அழகில்
தடுமாறிப்போனேன்

ஆடம்பர செலவில் அவள்
தன்னைக் கரைக்க
வளைந்து போகும் நதிபோல்
இசைந்தே போனேன்
நான்கு பிள்ளைகளையும்
செல்வமாய் நான் நினைக்க
அவளோ சுமை எனக் கருதினாள்
வெளியே பலர் பேசிக்கொண்டனர்
நல்ல அழகிய குடும்பம்

ஆனால்.....!

அந்த அழகுக்குள் அத்தனையும்
நஞ்சு என்பதை
யாரும் அறியவில்லை
காலம் ஒவ்வொரு திசையாய்
ஒவ்வொருவரையும் உருட்டி விட
பெற்ற பிள்ளைகள் பிரித்துக் கொண்டனர்
என் சொத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அடங்கிய பம்பரமாய்
அவளும் அடங்கி விட்டாள்
முதுமை அது கொடுமை தனிமை
அது வேதனை
முற்றத்தில் கிடந்து நான்
நிலவை வெறிக்க
அவளோ வீட்டுக்குள் கிடந்து
கண்ணீர் சிந்துகின்றாள்

அன்று பார்த்த அழகிய வதனம்
இன்று சுருங்கி வெளிறி விட்டது
அழகு அது பறந்து போய்
பலநாளாச்சு எனினும்
என் உள்ளத்தில் வருத்தமில்லை
அன்று போல் இன்றும் நேசிக்கின்றேன்
என்னவளை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம்

பாசக்கிளிகளாய் பறந்து
வட்டமடித்து திரிந்தோம்
எம் குழந்தைப் பருவத்தில் !

கை கோர்த்து நடை பழக்கிய
என் அண்ணனும்
கிட்டிப்புள் என்னுடன்
விளையாடிய தங்கையும்
ஒன்றாக அன்பு நதியில் நீச்சலடித்து
இன்பம் கண்டோம்

பற்பல கதைகள் பேசி
பகலிரவாய் சிரித்து மகிழ்ந்தோம்
பாசங்களும் அடுத்த நிமிடத்தில்
பறந்து போகும் கோபங்களும்
சொல்ல வார்த்தைகளில்லை

எம் இனிமையான வாழ்வை சிதைக்க
உருக்கொண்டான் யுத்த அரக்கன்
யுத்தம் விதைத்து விட்ட
குண்டு வீச்சு விதைகளில் –நாம்
அறுவடையாய் அகதிகளானோம்
கதியற்றவர்களானாலும் பரவாயில்லை
ஆனால்...?
அரக்கனோ என்னை அநாதை ஆக்கினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்திற்கு பலியான
ஆயிரமாயிரம் மக்களுக்குள்
அடங்கி விட்டனர் என் குடும்பத்தினர்

என்னை மட்டும் ஒற்றை மரமாய்
பாலை வனத்தில் பரிதவிக்க விட்டான்
என்னைப்போல்
தனித்த பட்ட மரங்கள் இன்னும்
எத்தனை ...?
பாலைவனங்களில் அன்பு ஊற்றுக்காய்
தவமிருக்குமோ
நானறியேன்....!

**மௌனம்**

பல பேச்சுக்களின்
முற்றுப்புள்ளி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணே விழித்திடு

உலகம் நிலைத்து நின்றிட
அச்சாணியாக விளங்கும்
பெண்ணே !
உன்னை ஒருமுறை விழித்துப் பார்

அடுப்பங் கரையில் நெருப்போடு
போராட மட்டும்
பிறந்தவளல்ல –நீ
வலியவனை நலிவுறச் செய்வதும்
நலிந்தவனை வலிவுடையச் செய்யவும்
உன்னால் முடியும் –ஏனெனில்
ஆக்குபவளும் அழிப்பவளும் நீயேதான்

அத்தனை சிறப்புக் கொண்ட பெண்ணே
நீ ஒருமுறை சிந்தித்து விடு
நாகரிகம் என்பது உனக்கு மட்டுமல்ல
முழு உலகத்தற்கும் தான் நீயோ
உனக்கே உரியது என நினைத்துக் கொண்டு
அநாகரிகமாய் அழிந்து போகின்றாய்

தமிழின் தாயே! தமிழ் பெண்ணே !
பாரதி கண்ட புதுமைப் பெண்ணே !
நீ சாதிக்க வேண்டிய சாதனைகள் இன்னும்
காத்திருக்கின்றன தொலை பேசிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை பேசிகள் ஆனபின்பும்
நீயோ அதன் அடிமையாய்
வம்பளந்து வாழ்விழந்து
ஈற்றில் கற்பிழந்து வாழ்வது தகுமோ ...?

பெண்னே உன்னால் முடியாதது ஒன்றில்லை
இளமைப் பருவம் சாதனைப் பருவம்
அறியாமை இருள்களை விலக்கி
தமிழன்னை புதுப்பொலிவு பெற்றிட
இன்றே எழுந்துவிடு
தன் நம்பிக்கையுடன்!

**மழை**

வானம் சிந்திய கண்ணீரில்
மனித வாழ்வின்
புது அத்தியாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல்

அறிவுத் தாகம் தீர நான்
அறிவு நூல்களைத் தேடுகின்றேன்
கடல் அளவு நூல்கள் தந்தாலும் என்
அறிவுத் தாகம் தீராது

பறந்து பறந்து தேனினை சேகரிக்கும்
வண்டு போல் அமர்ந்து அமர்ந்து
நூலகங்களில் நல்ல நூல்களைப்
படிக்கின்றேன்
கலந்து பல நூல்களை கற்றுத்
தெளிந்த போதிலும்
பாலைத் தனித்து உண்ணும் அன்னம் போல்
தெரிந்து படிக்க வேண்டுமே
கட்டுக் கட்டாய் நூல்களை
கவனமாய் படிக்கும் போதிலே
கற்ற விடயம் தெரிந்து
காலம் தாழ்த்தாது படிப்போமே!

சாதனைப் படியின் தொடக்கத்தை
கற்றுத் தருவது தேடல்தான்
மனிதா……!
தேடிப்பார் தேசம் உனக்கேதான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளடைந்த வாழ்வு

விழியோரம் துளி கண்ணீர்
தூங்காத இரவுகளின்
காணிக்கையாய் !

தொலைந்து போன நாட்களின்
நினைவுகள் நிழலாய் அச்சமூட்ட
விம்மல்களோ கட்டுப்பாடிழந்து
பெரும் குரலெடுத்துக் கதற
ஆறுதலாய் கை பற்றுகின்றேன்

கண்மணி.....!

நான் அழைப்பது அவளுக்கு
புரியவில்லை
கனவிலும் நினைவிலும்
யுத்தத்தின் கோரத் தாண்டவம்
அரங்கேறி ஆட்சி புரிகின்றது
என் மகளின் மனதில்
தூக்கத்தில் தன் தாயை
தேடிக் களைத்த வலி தாங்காது
தேடிப்போன கனவில்
முள்ளி வாய்க்காலும்
நந்திக் கடலும் தென்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரற்றுக் கிடக்கும் உடல்களும்
சிதறிய உடற் பாகங்களும் கண்டு
ஓ............வென்று
கதறியழ எஞ்சிய எங்கள் வாழ்வு
மீண்டும் இருளடைந்து போனதுவே!

## தொலைந்த கனவு

காலைக் கதிரவனின்
கனல் ஒளிபட்டு
கலைந்து சென்ற கனவை
கண்டு பிடிக்க கண்களை
காத தூரம்
தொலைத்துப் பார்க்கின்றேன்
கலைந்த கனவோ
தொலைந்து விட்டது!

## நாட்குறிப்பேடு

வாழ்வின் வசந்தங்களை
செதுக்கி வைக்கும்
நினைவுப் பெட்டகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்று

சுகமான காற்றைத்தேடி
யன்னலைத் திறந்து வைக்கின்றேன்
வந்தது காற்று நான் தேடிய காற்றல்ல
அது வாய்க்காலின் சகதிக்குள்
வதங்கிய காற்று !

இதமான காற்றைத் தேடி
பாதையோரம் நடந்து செல்கின்றேன்
வந்தது காற்று நான் தேடிய காற்றல்ல
வாகனங்களின் புகைக்குள் வருந்திய காற்று !

சுதந்திரக் காற்றை சுவாசிக்க முனைந்தேன்
வந்தது காற்று நான் தேடிய காற்றல்ல
குண்டு வீச்சில் அடிபட்டு
கந்தக வாயுவை அள்ளி வந்த காற்று

ஓ.............!

காற்றே எங்கு நீ சென்று விட்டாய்
அடிக்கடி என் சுவாசப்பைக்குள்
சென்று வருவது நீ தானா ?
இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் மாசுக்களை என்னுள்
விதைத்து விட்டுச் செல்லும் விஷ வாயுவா...?
அக்கால கவிகள் வர்ணித்த
தூய பூங்காற்றே நீ
எப்போது வந்து
என் சுவாசத்தில் கலந்து கொள்வாய்......?

## புரியாத புதிர்

உலகம் அவசரமாய்
சுற்றுகின்றது
இங்கு எத்தனையோ
உள்ளங்கள்
அடிபட்டுப் போகின்றன
ஒருவன் சொல்கின்றான்
இந்த வாழ்வு இன்பம்
இன்னொருவன் சொல்கின்றான்
துன்பம்

புரியாத புதிராய் சுழலும்
வாழ்க்கைச் சக்கரத்தில்
நித்தமும் உழன்று
ஊமையாய் சென்று
மறைந்தால்
வாழ்ந்ததன் பயனென்ன...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு

மழைத்துளிகள் ஒன்று சேர்ந்து
உருவான ஆறு நான்
சிகரம் வழியே பாய்ந்து வரும்
சலசலக்கும் சிற்றாறு

ஓடி ஓடி ஊர்களை
செழிப்பாக்கும் மலையாறு
பாடித்திரிந்து காட்டு வழியே
பயணம் செய்யும் காட்டாறு

துள்ளித் திரிவேன் பாறைகளில்
அள்ளித் தருவேன் செல்வங்களை
கொள்ளையடிப்பேன் இளநெஞ்சங்களை
கொஞ்சும் மழலை மொழி பேசி

ஆறு அது நீண்ட ஆறு
குளங்கள் நீர்த்தேக்கங்களில் தேங்கினாலும்
இறுதியில் சேர நினைக்குது
சமுத்திர ராஜனிடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவூட்டும் ஜீவன்கள்

ஓ..........!

அற்ப பிராணியே உன்னை
நசித்து விட வேண்டும்
நீ கடித்த இடம் இன்னும் வலித்தபடி இருக்க
உன் இருப்பிடம் தேடி
அலைகின்றேன்
உன் கூட்டத்தையே அழிக்க
மருந்துடன் காத்திருக்கின்றேன்
அதிகாலை வானத்து முகம் பார்த்து
சோம்பலாய் அமர்ந்திருக்கின்றேன்
இன்றைய உணவிற்கு வழி தெரியாது !

என் குழந்தை பசித்தழ
மனைவி புறுபுறுத்து ஏச
மௌனமாய் குந்தியிருக்கின்றேன்

புகைவண்டித் தொடராய்
ஊர்ந்து செல்லும் என் எதிரிகளைக் கண்டதும்
கொதித்து எழுகின்றேன்
அவைகளை அழிக்க

சிற்றெறும்பு முதுகில் சுமந்து செல்லும்
சுமைதான் என்ன ?
உற்றுப் பார்க்கின்றேன்
உணவுத் துகள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரி காலத்தில் சுகமாய் வாழ
கோடையில் உணவு சேமிக்கும்
உன் உழைப்பு என்னை உலுக்கி விட்டது
அற்ப பிராணிகளல்ல நீங்கள்
ஆறறிவு மனிதனுக்கு
அறிவூட்டும் ஜீவன்கள் !

தெளிந்து விட்டேன் உங்களால்
போற்றுவேன் என்றும்
உழைப்பின் மேன்மையை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனா.......?அவளா........?

பாடசாலை பஸ்சில்
அமைதியான பையனாக
சிலவருடங்கள் பார்த்த ஞாபகம்
பல பையன்கள்
குறும்புடனே பயணம் செய்த போதும்
நீயோ ஏகாந்த அமைதியாய்
இருப்பாய் சில வருடங்களின் பின்பு
மீண்டும் உன்னைக் காண்கின்றேன்

அவனா...? இல்லை அவளா.....?
அவனே தான் அமைதியான பையனாக
இல்லை......!
அமைதியான பெண்ணாக

வளையல்கள் அணிந்து
குட்டைப் பாவாடையோடு
பெண்ணுக்கே உரித்தான
பாவனையுடன் ஏகாந்த அமைதியாய்
பேரூந்து நிலையத்தில்
அவள்..............!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணம்

பல நாள் பேசி
பல பேர் ஆராய்ந்து
பக்குவமாய் கதைத்து
பவித்திரமாய்
கொண்டாடி
வீடு நிறைய பந்தல் போட்டு
வயிறு நிறைய
விருந்து படைத்து
கொண்டாடுவர் அன்று.....!

ஆனால் இன்று ......?

சில நாள் பேசி
சில நாள் பழகி
மண்டபத்தில் மணநாள் வைத்து
மனம் கசந்து சில நாள் வாழ்ந்து
விவாகரத்தில் முடியும்
திருமணங்கள் ...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையில்லாப் பட்டதாரி

சுகமான தூக்கத்திற்குள்
என் கனவுகளை எண்ணிப் பார்த்து
இதமாக ரசிக்கின்றேன் !
தொலைந்து போன நாட்களுக்குள்
நிறுத்தி வைக்கப்பட்ட
நிஜமான நினைவுகளை அடைகாக்க
என் விழிகளை மூடிக் கொள்கின்றேன்

விடிகாலைத் தூக்கம்
விழி திறக்க மறுக்கின்றது
படுக்கையில் புரண்டு
மீண்டும் உறங்குகின்றேன்

தூக்கம் கலையவில்லையோ ..?
இன்னும் என்ன உறக்கம்
தந்தையின் சொல்லம்புகள் தாக்கும் முன்னாடி
கடைக்கு போக வேனும்
நேரத்தோடு எழும்பு
தாயின் முட்கள் தைத்து விட்டன
என் இதயத்தை

அண்ணன் அண்ணியின் சொல்
ஏவுகணைகளும் என்னுள் மோதி வெடிக்க
எதிர்த்து பேச என்னுள் நான் வளர்த்த தயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் அப்பாவியாய் கேட்கின்றேன்
எனக்கேன் இந்த வேலைகள்
எனக்கேன் இந்த தொல்லைகள்
என்னை நிம்மதியாய் சுவாசிக்க விடுங்கள்

வேலை வெட்டி இல்லாத உனக்கு திமிரா
சம்மட்டியாய் வந்த சொற்கள்
என்னைப் பிழிந்து சாறாக்கின
என்ன செய்ய என் கனவுகளை
சுமந்து கொண்டு நித்தம் தள்ளாடுகின்றேன்

நான் படித்த படிப்புக்கள் பெற்ற பட்டங்கள்
அனைத்தையும் பெட்டியில் பூட்டி விட்டு
வேலையில்லாப் பட்டதாரி எனும்
புதுப்பட்டத்தை சுமந்து
நடைபிணமாய் அலைகின்றேன்
என் கனவுகளை அடைகாத்தபடி !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான தேவதையும் காற்றும்

வான தேவதை சலவைக்கல்லில்
துவைத்து நீலம் போட்டு வைத்த
அழகிய சேலை
காற்று என்னும் கள்வனால்
கவரப்பட்டு வானவெளியில்
விசிறப்பட்டது

தேவதை சிந்திய கண்ணீர்த் துளிகள்
மழையாய் பூமியை முத்தமிட
சோகமாய் அமர்ந்திருக்கின்றாள்

சேலை திருடிய கள்வன்
தன் காதலிகளான மலர்களோடு
மதுரகானம் பாடி தென்றலாய்
தவழ்ந்து விளையாட
கோபம் தாளாது விரைகின்றாள்
பூக்களைத் தேடி

தன் மெல்லிய கரங்களால்
பூக்களைப் பறித்து பிடுங்கி
எறிகின்றாள்
அவை வானச் சேலையில்
ஒட்டிக் கொண்டன
நட்சத்திரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல நடை பயின்று
துள்ளி விளையாடி
பந்தை அடிக்கின்றாள் – அது
காற்றின் வேகத்தால்
வானத்தில் ஒட்டிக் கொண்டது
வட்ட நிலவாய் மீண்டும்
சோகம் தழுவிக் கொள்ள
அவள் வளைத்துக் கட்டி விட்ட
வானவில் ஊஞ்சலில்
சற்றே அமருகின்றாள்

காற்றெனும் கள்வன்
காதோரம் கதைகள்
சொல்லிவிட்டுப் போனான்
என்னை நீ வெல்ல முடியாது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலராத வாழ்வு

கானல் நீராகிப் போன
கரையேறாத வாழ்வில்
கனவுகளைச் சுமந்த வண்ணம்
காத்திருக்கும் நெஞ்சங்கள்

உயிரைக் காப்பாற்ற
உடமைகளைக் கைவிட்டு
உள்ளம் நொந்து துடிக்கின்றனர்

முட்கம்பி வேலிக்குள்
முகம் புதைத்து அழுதுவிட்டு
முடிச்சுப் போட்ட வாழ்வை எண்ணி
நித்தம் கலங்கி துடிக்கின்றனர்

புனர் வாழ்வென்றெண்ணி
இன்னும் உணரப்படாத வாழ்வை
புரிந்து கொண்டு வாழ்வது
அடுத்த ஜென்மத்திலா ?

விரிந்து பரந்த வீரிய உலகில்
விதம் விதமாய் வாழ
வழியுமில்லை
விம்முகின்ற நெஞ்சங்களிற்கு
விடியலும் மலரவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும்

ஆற்றோரம் ஓர் குடிசை
அமைதியாய் அழகாய்
அதில் நான் வசிக்க வேண்டும்

சலசலக்கும் வெள்ளி நதியில்
கால் பதித்து
தங்க நிலவின் அழகை
நான் ரசிக்க வேண்டும்

வெள்ளை மணலில் கையளந்து
துள்ளித் துள்ளி நான் நடந்து
வானம் பாடியாய் பறக்கவேண்டும்
பட்டாம் பூச்சியின் இறகை
இரவலாய் ஒருநாள் கேட்டு
பூக்களின் அழகை நான் பருக வேண்டும்

காட்டு மலர் கொய்து
கானகமெங்கும் நடைபயின்று
இயற்கையின்
வஞ்சனையற்ற அழகை
நான் வடிக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி...



கவிதை வானில் புதிய நட்சத்திரமாக "நிகழ்கால நிஜங்கள்" எனும் கவிதைத் தொகுதியூடாக அறிமுகமாகும் செல்வி நிரோசினி குபேந்திரன் அவர்கள் எனது நீண்ட காலத்தோழி ஆவார். அமைதி, பொறுமை, வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமென்ற இலட்சியம், தன்னம்பிக்கை கொண்டவர். யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நாம் இருவரும் ஒன்றாக கல்வி கற்ற காலங்களில் இவர் நூல்களை வாசிப்பதிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மிகவும் சிறந்தவராகத் திகழ்ந்தார்.

பட்டப்படிப்பினை தொடர்ந்து கொண்டிருக்கும் இவ் வேளையிலே நிகழ்கால நிஜங்கள் என்னும் கவிதைத் தொகுதியினூடாக இலக்கிய உலகில் கால் பதித்து சாதிக்கத் தொடங்கி விட்டார். இவரது அனைத்து கவிதைகளிலும் 'நிகழ்கால நிஜங்களை' பல்வேறு கோணங்களிலும் உணர்வுபூர்வமாகவும், அழகாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இக் கவிதைகள் மிக்க ஆழமான அர்த்தம் பொதிந்தவையாக காணப்படுவதோடு சில கவிதைகள் பல அர்த்தங்கள் பொதிந்தனவாகக் காணப்படுகின்றது. 'ஹைக்கூ....' கவிதைகள் மிகவும் சிறப்பாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கவிதை வானில் நட்சத்திரமாகப் பிரவேசிக்கும் எனது தோழி சூரியனாக வலம் வரவேண்டும் என இறைவனை மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

பிரியமான தோழி

க. கனகதுர்க்கா,

2ம் வருட மாணவி,

பேராதனைப் பல்கலைக்கழகம்,

கண்டி.

வெளியீடு

துளிர்கள் உளசமூக மேம்பாட்டு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org